


# திறவுகோல்

2054

சித்திரை

மாத இதழ்

**வெளியீடு:**

**மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.**

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.

நோக்கம்:
மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...
பகிரி: +91 8220567322

இணையம்:
https://maintharkal.mannai.in/

# வெயில் கூட ஓர் அழகு - கோடைக்காலம்

சித்திரை மாத வெயில் சிந்தாமல் சிதறாமல் அடிக்கும்.சிந்தும் வியர்வைத் துளிகள் நம்மை எரிச்சலூட்டும். மின்வெட்டால் உறக்கம் தொலையும். உடல் தளர்வுறும். உடைகள் மீது வெறுப்பு வரும். நிறம் மாறிவிடுமோ என நம் மனம் நிலை தடுமாறும். மாணாக்கர்களை தேர்வுகள் வந்து பாடாய்படுத்தும்.

ஆனபோதிலும், மனதிற்கு பிடித்தவர்களால் நாம் எவ்வளவு பாடாய்ப் படுத்தினாலும் அந்த அன்புத்தொல்லை நமக்கு பிடிக்கும். அதுப் போன்றவைத்தான் இந்த கோடையின் சிரமங்களும்.

கோடைக்கும் ஓர் அழகிய கோலம் உண்டு. அலங்காரமற்ற இயல்பான அழகு உண்டு. சுட்டெரிக்கும் கதிரவனின் வெள்ளொளி கொஞ்சம் பூமியின் மீது தன் கோபத்தை காட்டும் நேரம். தெரிக்கும் கோபத்தில் சிவக்கும் பெண்ணும், எரிக்கும் வெயிலில் வருத்தும் கோடையும் ஒன்றுதான். இரண்டுமே ரசிக்கத் தக்கவை.

சித்திரை நிலவுக்கு சேலை கட்டியும்,வைகாசி நிலவு பொய் பூசிய நிலவென்றும் வெயில் சிந்துவதால் வெக்கை வரும் என்றும் கவிஞர்கள் கோடையைக் கொண்டாடியுள்ளனர். கோடைக்கால காற்றே என காதலியின் வருகையையும் ஏப்ரல், மேயிலே பசுமையேயில்லை என கல்லூரிக்கு  கன்னிகள் வராததால் காய்ந்துப் போன காளையர்களாய் கவிஞர்களும் கோடையை பெண்ணுடனேயே ஒப்பிடுகிறார்கள்.

சித்திரை முழுநிலவில் நாம் மூழ்கிட முடியாது.ஆனால் சுடும் அந்த இரவும் சுகம்தான். ஏற்கனவே உறக்கத்தை தொலைத்த காதலுக்குள கோடையில் ஓர் உக்கிரம் உண்டு.

அந்த வியர்வை கசகசப்பிற்க்குள்ளும் ஓர் காமம் உண்டு. பொங்கிப் பெருகும் மோகம் உண்டு.

கோடை என்பது பள்ளிகள் மூடிடும் நேரமோ. வெக்கையால் வெந்து போகும் நேரம் மட்டுமல்ல. அது ஓர் இடைவெளி. தன்னைப் புதுப்பிக்க எப்பொழுதுமே மனிதர்களுக்கு ஓர் இடைவெளி தேவை. அவை நம்மை மேலும் மெருகேற்றும். மனதில் மாற்றம் வரும். ஏதோ ஒரு தேடலோ, ஏதோ ஒன்றை கற்றுக் கொள்ளவோ முயற்சிக்கும் நேரம்தான் கோடைக்காலம்.

மழையாகவும் பனியாகவும் நம் குளிர்ந்த வேளைகளில் வெயிலின் உலர்வதைத் தானே விரும்பினோம். உக்கிரமாக வரும்போதும் தள்ளிவிடக் கூடாதென்றே..??? உக்கிரம்

தவிர்க்க ஊர்க் கோவில்களில் திருவிழா வரும். உணர்வில் கலந்த உறவுகள் ஒன்றாக கலந்திடும் பொன்னான காலம் தான் திருவிழாக்கள்.

வானையும், மண்ணையும் வெளியில் நின்று ரசித்தது போதுமென்று வீட்டுக்குள் இருக்கும் உலகினையும் அழகினையும் ரசிக்க வைக்கும் காலம் தான் கோடை. வைகாசி முருகனின் விசாகத்திற்கு மட்டும் சிறப்பானது அல்ல. திருமண  முகூர்த்திற்கும் சிறப்பானது.

கோடை நம் விருப்பத்தை நிறைவேற்றுவதற்றுக்கான காலம். நம் ஆசையை அறங்கேற்றுவதற்கான காலம். எல்லோரும் தங்கள் வெந்து நொந்து கொண்டிருக்கும் வேலைகளுக்கு ஓய்வு தந்து, வெளியில் எங்கேயும் சுற்றுலா செல்லும் நேரம் தான் கோடைக்காலம்.

சித்திரையில் பிள்ளை பிறந்தால் சீரழியாது... சீக்காகும்... என்பதைக்கூட அறியாத சிற்றறிவுக்காரர்கள் இன்றைக்கும் உள்ளனர்.

காரம் வேண்டாம் நீராகாரம் போதும் என்போம். முழுக்கோழி வேண்டாம் மோர்சோறு போதுமென்போம்.பலாப்பழம் நம் வயிற்றை பதம் பார்க்கும். மாம்பழ மணம் மனசெல்லாம் வீசும். தர்பூசணி நம் தாகம் தீர்க்கும்.

குளிர்பானம் நம் வயிற்றை குளிர்விக்கும். மலிவு விலையில் மல்லிபூவும், மாங்காயும் விற்க, வீடு தவறாமல் காய்த்திருக்கும் முருங்கையும், நாவறண்டு நீர் தேடி, நம்மை நாடி வரும் காக்கையும் குருவியும், சித்திரைப்பட்ட உளுந்தும், எல்லும் கொலுத்தும் வெயிலை தாங்கி வளரும் நெல்லும், புல்லும் என்றே நெஞ்சம் நிறையும் கோடை.

காய்த்துத் தொங்கும் புளியம்பழங்களும் கூடவே பல்லாங்குழியும், வாசல் தோறும் மாங்காய் வத்தலும், அடைமழைநேரத்தில் ஆகுமென்று அடை மாங்காயும் காயும்,அம்மையும், மஞ்சள் காமாலையும், வியர்க்குருவும் நம்மை விரட்டி வரும். அரிப்பு நம் உடலை ஆக்கிரமிக்கும். பருக்கள் நம்மை பதற வைக்கும், என்றே பல்வேறு ஆரோக்கியக் குறைபாடுகள் இருந்தாலும் அக்னி நட்சத்திரத்தைக்கூட கண்டு கொள்ளாமால் ஆனந்தமாய் விளையாடும் குழந்தைகள் கொலுத்தும் வெயிலில் திடீரென வந்து நனைத்த கோடைமழை போன்றவர்கள்.

அனல்காற்றோடு போராடி அறைவயிற்று கஞ்சி குடிக்கும் அன்றாட காய்ச்சிகளும், வாழ்வை நகர்த்த வறுமையைப் போக்க மரங்களேதுமற்ற அந்த நகரச் சாலைகளில் தங்கள் வாகனங்களை இயக்கிச் செல்லும் மனிதர்கள் நினைத்தால் கொஞ்சம் வறுத்தமானகாலம் தான் கோடைக்காலம். தண்ணீர்க்கு பஞ்சம் தான், தொண்டை வறண்டு  போய் தாகம் பெருகும் தான், ஆனால் தண்ணீரின் அருமை புரியும். சிக்கனத்தின் பெருமை புரியும்.

காற்று சற்று வேகமாய் வீசி விட்டால் கூடபோதும் அதுவே தென்றல் தான். மழைநீரை சேமிப்பது போல் இந்த காற்றை சேமிக்க வழியில்லையா...??? என வருடிவிடும் அந்தக் காற்றை நோக்கி என்னை விட்டு எங்கும் செல்லாதே என்றே நம் மனம் ஏங்கும். கோடைக் காலம் என்பது ஓர் அவதி நிறைந்த அழகான நேரம்.என்ன பெரிதாய் இருக்கப்போகிறது என்றே இயல்பாய் கடந்த விடயங்களையெல்லாம் வியந்து நம்மை இரசிக்க வைக்கும் காலம்.

நம் உடல் வலிமையின் சோதனைக் காலம். நீயா நானா என இயற்கை நம்மிடம் சவால் விடும் நேரம். இத்துணை இடர் தரும் எத்தனை டிகிரி வெயிலையும் தாங்கிவிடலாம்••• ஆனால் ஐந்து நாள் அடைமழையை தாங்க முடியுமா...?????



சொல்லுங்கள் மழை மட்டுமா அழகு..!!!
சுடும் வெயில் கூட ஓர் அழகு.

—

G. சூர்யகலா சரவணன், B.E,
கண்டிதம்பேட்டை, மன்னார்குடி.

---

# இன்பச்சோதியாய் சுடரட்டும் - சோபகிருதுவே!!!

நனிக்கனிகள் கண்டுக்கண்கள் ரசிக்க
இனிப்போடு அறுசுவையுமுண்டு ருசிக்க
சிறந்த முத்திரைப் பதிக்கத்தோன்றிப்
பிறக்கும் அழகு சித்திரையே!

மக்கள் மனந்தான் பொங்கிமகிழ
மங்கா நலந்தான் வந்து வழிய
எக்காலத்தும் நன்மையே நடக்க
பொற்காலமாய் மலருகச் சித்திரையே!

அன்பு மலர்ந்திட வேண்டும்
அறிவினை பகிர்ந்திட வேண்டும்
வாடும் வறுமை நீங்கிட வேண்டும்
வளங்கள்யாவும் ஓங்கிடவருகவே
சித்திரையே!

சோர்வு நீங்கி காலத்தே பயிரிடு
சோக நீங்கி ஞாலத்தை வென்றிடு
சோதனை நீங்கி சாதனை புரிந்திடு
சோலைவனமாய் வாழ்வு பூத்துக்குலுங்க
வருக வருகவே சோபகிருதுவே!!!

—

இரா.ரம்யபாரதி,
புதுச்சேரி.

# கரும்பன் (சிறுகதை)

*நிஜத்தையே உத்து பாத்திட்டிருந்தா அது பொய்யா மாற தோணும். அதே மாதிரி நிழலையே உத்து பாரு... அதுல நிஜமும் சேரும்.*

*இப்படி நிஜத்துக்கும் நிழலுக்கும் இடையே நடந்த கதையைத்தான் இங்கே சொல்லிக் கொண்டிருக்கிறேன்.*

*இன்னும் சற்று நேரத்தில்... சத்யா சுகர் பேக்டரிக்கு செல்லும் கரும்பு லாரிகள் ஆடி அசைந்து ஆவென... திறந்த வெளியை அடைத்துக் கொண்டு வந்து விடும்.*

*பள்ளி விட்டு ஓடி வரும் சிந்தன் வேக வேகமாய் பைக்கட்டை தூக்கி வீசி விட்டு கிழக்கு நோக்கி ஓடினான். ஓட்டம் அவனோடே பிறந்தது. அவனைப் போலவே பல பையன்கள் ஆங்காங்கே நரிகளைப் போல பதுங்கி இருப்பார்கள். இது வழக்கம் தான். பதின்பருவத்து பையன்களின் சாகச நேரங்கள்.*

*தவிட்டுப்பாளையம் தொட்டு ஆப்பக்கூடல் வழியாக சுகர் பேக்டரிக்கு செல்வது சுலபம். அதனால் வரும் கரும்பு லாரிகளெல்லாம் இந்த வழியில் தான் வரும். முருகன் தியேட்டர் தாண்டியதும்... ஒரு சிறு வளைவு வரும். அங்கே கொஞ்சம் இருள் படர்ந்த புளியமரம் வளைந்து நெளிந்து சூட்சுமமாய் சூழ்ந்திருக்கும். குண்டும் குழியுமான சாலை.... லாரியை ஒரு முப்பது வினாடிகளுக்கு மெல்ல நகர்த்தும்.*

*அது தான் நேரம். அது தான் சவால். ஆங்காங்கே பதுங்கி இருக்கும் பையன்கள் சத்தமில்லாமல் வண்டிக்கு பின்னால் ஓடுவார்கள். சரசரவென லாரியின் பின்னால்... முதுகில் கர்ப்பம் தரித்தது போல கட்டப்பட்டிருக்கும்... கரும்புகளின் இடைவெளியில் பெருவிரல் பதித்து வெறி கொண்டு தொற்றுவார்கள். ஏறும் போதே வண்டியின் வேகத்துக்கு தகுந்தாற் போல மற்றவர்களை விட முந்திக் கொண்டு யார் ஏறுகிறார்களோ அவர்களுக்கு தான் அன்னைக்கு கரும்பு லாட்டரி.*

*ஏற முடியாதவன் சத்தமில்லாமல் பின்னாலயே வண்டியோடு ஓடி அல்லது நின்று அல்லது வழி விட்டு.... ஒதுங்குவானே தவிர வாய் திறந்து எதுவும் பேச மாட்டான். அது... ஒரு மாதிரி வழக்கத்தில் இருக்கும் அக்ரிமெண்ட். ஒரு லாரியைத் தவற விட்டோர் அடுத்த லாரிக்கு காத்திருப்பார்கள். மூச்சு சப்தம் மட்டும் தான். மாறாக பேச்சுக்கு மூச்சிருக்காது.*

*வண்டி ஓட்டுனருக்கு இந்த விசயம் தெரியவே கூடாது. சில நேரங்களில் சில*

ஓட்டுனர்களுக்கு விசயம் தெரிந்து... வேண்டுமென்றே வண்டியை வேகமாய் ஆட்டி ஓட்டுவதும் உண்டு. வேண்டுமென்றே மெதுவாக......போனா போகட்டும்...... ரெண்டு கரும்புல என்ன வந்துரும் என்பது போல... சில ஓட்டுனர்கள் விடுவதும் உண்டு. எந்த நாள் யாருக்கென்று யாருக்கும் தெரியாது. கனத்தோடு செல்லும் லாரியை லாவகமாய் கொண்டு சேர்க்க சிலர் சத்தமில்லாமல் மெல்ல நகர்த்தி விடுவார்கள்.

ஆனால் அந்த முப்பது வினாடிகளில் பல ஓட்டுனர்களுக்கு கரும்பை பறி கொடுக்க கூடாது... என்பதில் ஈகோ தாறுமாறாய் மண்டைக்குள் ஓடும். எப்படியும் இரண்டு சல்லையாவது உருவி எடுத்திட வேண்டும் இவர்களுக்கு. ஒரு முறை வண்டியை நிறுத்தி அடிக்க வந்த ஓட்டுனரை ஊர் பசங்கள் எல்லாரும் சேர்ந்து புரட்டி எடுத்தது முன்னொரு காலத்துக்கு கதை.

ஆக ஓட்டுனர்கள் வண்டியை விட்டு மட்டும் இறங்க மாட்டார்கள். இது ஒரு பலமான... பலவீனமான போட்டி. போட்டியில் யார் இருக்கிறார்கள்... என்றெல்லாம் தெரியாது. ஆனால் தினமும் இந்த நேரத்துக்கு இந்த போட்டி நடக்கும்.

கரும்பு உருவுவதில் சக்கை போடு போடுவது எப்போதும் சிந்தன்தான். அவனை அடித்துக் கொள்ள ஆளே கிடையாது. இலக்கியன் கூடவே ஓடி வருவான். சில நேரங்களில் முந்தி விடுவான். நான்கு நாள் சிந்தன் நாளென்றால் இரண்டு நாள் இலக்கியன் நாள். உள்ளே இருவருக்குமே புகைச்சல் தான். பனிப்போரைக் கூட நிதானமாகவே கையாள்வார்கள். சிந்தனுக்கு கரும்புகள் கொழிக்கும் நாளில் கூட... ஊருக்கே கொடுத்தாலும் ஒரு துண்டு கூட இலக்கியனுக்கு தர மாட்டான். அது ஒரு போட்டி. இலக்கியனும் அப்படித்தான். இன்னும் ரவீந்திரன்... ராஜேஷ்குமார்.... கலையன்... எல்லாருமே போட்டியில் இருக்கிறார்கள்.

சிந்தனின் நண்பன்... உதவியாள்... அடியாள்... என்று எல்லாமுமாக இருப்பவன் சந்திரன். சிந்தன் உருவி உருவி சாலையில் போடும் கரும்புகளை எல்லாம் மீட்டெடுக்கும் பொறுப்பு சந்திரனுக்கு. கரும்பள்ளி திரும்புகையில் பையன்கள் மத்தியில் வரும் கெத்துக்கு ஈடு எதுவுமில்லை. ஆளாளுக்கு புகழ்வார்கள்.

"அது எப்படி சிந்தா... காத்தா பறந்து... படக்குன்னு வண்டில தொத்திர்ற...." சந்திரனுக்கு கன்னம் சிவக்கும் அளவுக்கு ஆச்சரியம் தான் அது. அவன் கண்கள் எப்போதும் சிந்தனை அரக்க பரக்க தான் பார்க்கும். எப்போதும் அதில் ஒரு பதற்றம் இருக்கும்.

ரோட்டில் கெத்து காட்டி விட்டு அம்மாவிடம் சிந்தன் வாங்கும் அடி கொஞ்ச நஞ்சமல்ல. தின்ற கரும்பெல்லாம் சக்கையாக வந்து விழும் அளவுக்கு அடி பிரித்தெடுப்பாள் அம்பிளி. ஆனாலும் சிந்தன் போக்கு லாரியைப் பார்த்து விட்டால் சித்தன் போக்கு தான்.

அதெப்படி அந்த இடத்தில் மட்டும் இருள் சூழ்ந்திருக்கிறது என்று லாரி ஓட்டுனர்களுக்கு குழப்பம் தான்.

ஒவ்வொரு முறையும் கார்ப்பரேஷனில் இருந்து வந்து சாலை விளக்கை மாட்டி விட்டு போன அடுத்த அரைமணி நேரத்தில் குறி பார்த்து கல் கொண்டு உடைப்பான். சகாக்களுடன் சேர்ந்து முப்பது வினாடி நீளத்துக்கு சாலையில் ஆங்காங்கே குழி தோண்டி ரோட்டை உடைத்து பள்ளம் உண்டாக்குவான். கரும்பு உருவுவதில் ஒரு தீவிரம் உண்டு அவனிடம். அவன் தலைமை தாங்க... அந்த வேலைகளுக்கு போட்டி பொறாமை விட்டு... பையன்கள் ஒன்று கூடி விடுவார்கள். இயற்கையாக உருவான குழிகளை முன்னெப்போதோ பார்த்ததை மனக்கண்ணில் மேப் விரித்து... அதே போல நோண்ட சொல்வான். கட்டுவதற்கு மட்டுமல்ல... இடிப்பதற்கும் மூளை வேண்டும். கால்களிலேயே கணக்கு போடுவான்.

அப்படி என்னதான்டா அந்த கரும்புல என்று கேட்போருக்கு சிரிப்பு தான் பதில். சட்டென உயர்ந்து நெற்றியில் சிரிப்பான். ஒரு மர்மம் அவன் கன்னத்தில் புன்னகையாக விரியும்.

கொஞ்சம் விபரம் தெரிந்த அண்ணன்களுக்கு ஒரு மாதிரி புலப்பட்டது. அவன் குறி கரும்பு இல்லை. ஓடும் லாரியில் ஏறி இறங்கும் சாகசம் தான். யாரும் செய்ய முடியாததை தன்னால் செய்ய முடியும் என்று காட்டுவது. ஒரு வகையில்... படிப்பு வராத பையனின் கவன ஈர்ப்பு. உதாசீனத்தின் உச்சத்தில் அமர்ந்து இங்க பாரு இது தான் நான்னு சொல்லும் பழிவாங்கல். மற்ற நேரங்களில் எல்லாம் பூச்சி போல இருப்பவன் லாரியைப் பார்த்து விட்டால் மட்டும் படமெடுப்பது ஏனாம்.

பல நாட்களில் வேர்த்து விறுவிறுத்து... உயிரைப் பணயம் வைத்து... ஓடும் லாரி பின்னால் ஏறி... உருவி போட்ட நாலைந்து கரும்பு சல்லைகளையும்... கேட்கும் நண்பர்களுக்கு கொடுத்து போனதும் உண்டு. ஆக அவனுக்கு கரும்பு மேட்டர் இல்லை. அதை உருவும் நேரம் தான். அதில் அவனை ஒரு இதுவாக ஆக்குகிறான். அந்த சாகசத்தில் தன்னை தனக்கே நிரூபிக்கிறான்.

மூச்சை பிடித்துக் கொண்டு வண்டி.... முக்கு ரோட்டில் வரும் போதே... மூச்சில் வேகம் ஏற்றி வீதிக்குள் நுழைந்து... ஓடி குறுக்கு வழியே கடந்து... வரிசையில் வாய் திறந்து நீருக்கு குத்த வைத்திருக்கும் வண்ண வண்ண குடங்களைத் தாண்டி... கண்ணன் வாசல் கயிற்றுக் கட்டிலைத் தாண்டி.... கொல்லாக்காவின் குடிசைக்குள் நுழைந்து அவளிடம் ரெண்டு திட்டு வாங்கி... சின்ன பாலம் தாண்டுகையில்... ஆடி அசைந்து லெப்ட்டில் சரிந்தபடியே போகும் லாரி இனித்து இளிக்கும்.

*வண்டி வளைவில் திரும்புவதற்கும்... ஓடிய வேகத்தில் சரிவாக இடம் பார்த்து ஏறுவதற்கும் டைமிங் சரியாக இருக்கும். அப்படி தான் கணக்கிட்டிருப்பான். ஏறி விடுவான். ஏறினால் தான் விடுவான்.*

*முப்பது வினாடிகள் 25 ஆகும். 25... 20 ஆகும். 20... 15 ஆகும். இன்னும் 5 நொடிகள் தான் இருக்கிறது. அதற்குள் வண்டி வேகமெடுத்து விடும். அதற்குள் அவன் வேலையை காட்டி விட வேண்டும். உயிரெல்லாம் திரட்டி முகம் உப்பும் எதிர்காற்றில் உருவி கீழே போட்டு உலகை ஓட்டுபவன் போல லாவகமாக குதித்து கையை தட்டிக் கொண்டே சிரிப்பான். ஆனால் அன்று கையில் ஒரு கரும்பும் மாட்டவில்லை. வழக்கமான கட்டில்லையோ என்று கூட தோன்றியது. எத்தனை முயன்றும் உருவ முடியவில்லை.*

*இந்த மாதிரி மற்ற பையன்களுக்குத்தான் ஆகும். சிந்தனுக்கு முதல் முறை. முட்டிக் கொண்டு வந்த கோபத்தோடு இறங்கவும் மனது வரவில்லை. சற்று நொடியில் வண்டி வேகமெடுத்து விடும். அப்புறம் இறங்கவோ குதிக்கவோ முடியாது. இந்த ஏரியாவைத் தாண்டி செங்கல் சூளை பக்கம் சென்று விட்டால்... ஓட்டுனர்கள் ஆளே மாறி விடுவார்கள். இருக்கும் கோபத்தை எல்லாம் சேர்த்து வைத்து செங்கல் சூளையில் போட்டு வாட்டி எடுத்து விடுவார்கள். சீனியர் நீலவாணன் சொன்னது நினைவுக்கு வந்தது. வேறு வழி இல்லை. சக போட்டியாளன் இலக்கியன்... சிந்தனின் காலைப் பிடித்திழுத்து கீழே விழுக்காட்டி காப்பாற்றினான்.*

*முதன்முறையாக வண்டி வெற்றி பெற்று டிக்கி ஆட்டி போவது போல இருந்தது. கீழே கிடந்தபடியே பார்த்த சிந்தனின் கண்களில் மிக பெரிய தோல்வியை அது காட்டியது.*

*ஆக, வேகம் பத்தாது. விவேகத்தோடு செயலாற்ற பயற்சி செய்தான். லாரியின் ஓரங்களில் உருவ கூடாது. இடையில் உருவினான். ஒவ்வொரு முறையும் புது புது வித்தைகளை கற்றான். பிறகு தோல்விகள் பெரிதாக அவனுக்கு வாய்க்கவில்லை. டேய் கரும்பா என்று பெண் பிள்ளைகளிடம் பட்ட பெயர் கூட இருந்தது.*

*ராயர் தாத்தா கடையில் மூன்று கரும்பு சல்லைகளை கொடுத்து குடல் வாங்கி கொறித்துக் கொண்டே செல்வான். அன்னம்மாக்கா கடையில்... கரும்பு கொடுத்து பதிலுக்கு கோலி சோடா வாங்கி குடிப்பான். ஏன்டா இப்டி பண்ற என்று கேட்கும் யாருக்கும் கரும்பு தான் பதில். வேட்டை நடக்கும் இடத்துக்கு முன் பின்னாக இருக்கும் கடைகள்... வீடுகள் என்று யாருக்கும் சிந்தனை அவன் முன் திட்டி பேச வாய்ப்பு கொடுத்ததே இல்லை அவன் தரும் கரும்பு சல்லைகள்.*

*"ஊரே உன்ன திருட்டுப் பையன்னு சொல்லுது. அசிங்கமா இல்ல" என்று அம்பிளி போட்டு தாளிப்பாள்.*

"விவசாயிங்ககிட்ட மிக மலிவான விலைக்கு தானே வாங்கிட்டு போறானுங்க... நாலைஞ்சு சல்லை எடுத்தா இப்ப என்னவாம்" - எதிர் வீட்டு பெருசு காத்து வாக்கில் முனங்கும்.

நல்ல பையன் தான். ஆனா இந்த கரும்பு லாரியை பாத்துட்டா மட்டும் புத்தி பிசகிர்றான். காட்டு சாமிகிட்ட போயி விபூதி எல்லாம் அடித்து பார்த்தாயிற்று. லாரியும் கரும்பும்... புளிய மர இருட்டும்.. குண்டு குழி சாலையும் அவன் கனவில் அவனை சரித்து ஓட வைத்துக் கொண்டேயிருந்தது. ரெண்டே எட்டில் எகிறி லாரியில் ஏறி விட செய்தது.

ஒற்றைக் கையில் கூட கயிற்றை பிடித்து தொங்கி லாவமாய் குதித்து வண்டியோடு ஓடியபடியே பதமாய் சாலையில் நின்று ராஜ சிரிப்பை சிரிக்க முடிகிறது. எந்த கொம்பன் ஓட்டினாலும் என்கிட்ட இருந்து தப்பிக்கவே முடியாதுன்னு முனங்க செய்தது. அவன் வயது பையன்களுள் அவனே கரும்பு கிங்.

சும்மா சிந்தனை மாதிரி சீன் போடாத. அவன் அளவுக்கெல்லாம் உன்னால ஓடி ஏற முடியாது. இது அடிக்கடி பையன்களிடம் சுழலும் சொலவடை. பையன்கள் அவனை கண்கள் நிறைந்து பார்ப்பார்கள். சிலருக்குத்தான் சந்தோசம் இருக்கும். பலருக்கு எரிச்சல்தான்.

அவன் மீது பொறாமை படாதவர்கள் இல்லை என்றே சொல்லலாம். ஒண்ணுமில்லாத பையன் இத்தனை சூட்டிப்பா இருக்கான்... எலும்பும் தோலுமா இருந்துகிட்டு எவ்ளோ வேகம் பாரு... பாலும் தயிருமா தின்னுட்டு தத்தியாட்டம் இருக்குதுங்க என்று தம் பிள்ளைகளை சிந்தனை முன் நிறுத்தி திட்டுபவர்களும் உண்டு.

சில ஓட்டுனர்களுக்கு முன்னமே விஷயம் தெரியும். வேண்டுமென்றே வண்டியை இன்னும் வேகமாய் ஓட்டுவார்கள். அந்த சமயங்களில்...30 வினாடிகள் 25 வினாடிகளாக குறையும். அதற்கும் அஞ்ச மாட்டான். இன்னும் வேகம் கூடுவான்.

நிறைய முறை விழுந்தும் எந்திரிச்சு வருவான். அவனுக்கு மட்டுமல்ல. கூட ஓடும் நண்பர்களுக்கும் போட்டியாளர்களுக்கும் கை கால் தலை என்று கட்டு போடாத இடம் இருக்காது.

"இப்படியே பண்ணிட்டு இரு... ஒரு நாள் இல்ல ஒரு நா... லாரி சக்கரத்துல நசுங்கி சாவதான் போற..." என்று சொல்லி அழுத... அம்பிளி... கடலைக் காட்டில் சிலாகிக்கவும் தவறியதில்லை.

"என்னமா ஓடறான் தெரியுமா... திரைப்படம் கனக்கா... குதிக்கறான்.

*இப்டிங்கறதுக்குள்ள... ஏறி கரும்பை உருவி போட்டுட்டு காத்தை போல குதிச்சு வந்தர்றான்....!" மடியில் கட்டியிருந்த கரும்பு துண்டை எடுத்து ஒரு கடி கடித்துக் கொண்டே பேசும் அம்பிளிக்கு கணவன் இல்லை.*

*டெல்லிக்கு லாரி ஓட்டுநராக வேலைக்கு போனவன் தான்... திரும்பவேயில்லை. என்ன ஆனது என்று தெரியவில்லை. இருக்கிறானா இல்லையா என்று கூட தெரியவில்லை. அதிலிருந்தே லாரியைப் பார்க்கும் போதெல்லாம்... திட்டி தீர்ப்பாள். சிந்தன் வயிற்றில் இருக்கும் போதிருந்தே இதே பொழப்பு தான். வயிற்றுக்குள்ளிருந்த சிந்தனுக்கு லாரி சத்தம் எந்த மாதிரி கேட்டதென்று தெரியவில்லை. அம்மாவின் புலம்பல் எந்த மொழியிலாவது புரிந்ததா என்றும் தெரியவில்லை.*

*"லாரி டிரைவர் வேலை ஒசத்தியான வேலைன்னு தான கட்டி வெச்சாங்க. பேசாம செங்கல் சூளைல வேலை செய்யறவன கட்டிருந்தா கூட நிம்மதியா இருந்திருப்பேன்... எங்க போயி தொலைஞ்சான்னே தெர்லயே..."*

*அழுதழுது... புலம்பி புலம்பி... காலங்கள் கடந்து விட்டன.*

*இப்போதெல்லாம்.. லாரிக்கு பின்னால் யாரும் ஓடுவதில்லை. அங்கே சாலையில் குழிகள் இல்லை. சாலையோர லைட் நன்றாக எரிகிறது. பையன்கள் யாரும் அந்த பக்கம் தலை காட்டுவதில்லை. ஆனால் கரும்பு கொண்டு வரும் லாரிகள்... அந்த இடம் வந்தால் நகர்வதில்லை. எத்தனை முயன்றும் வண்டி ஸ்டார்ட் ஆவதில்லை. கரும்பு லாரியைக் கண்டதுமே அங்கிருக்கும் யாருமே வேக வேகமாய் கடந்து அந்தப் பக்கம் சென்று விடுவார்கள். பெரும்பாலும் டிப்போவில் சொல்லி தான் விடுவார்கள்.*

*நாலைந்து கரும்பு சல்லைகளை உருவி சாலையில் வீசி விட்ட பிறகுதான் வண்டி நகர ஆரம்பிக்கும்.*

*யாரும் எடுக்காத அந்த கரும்புகள் சற்று நேரத்தில் அம்பிளி வீட்டு வாசலில் கிடக்கும். அது பற்றி யாரும் பேசிக்கொள்வது கூட கிடையாது. பொது ரகசியம் போல அதில் ஒருவித அமானுஷ்யம் தான் எல்லாருக்கும். எத்தனையைத் தான் தின்ன முடியும். காய வைத்து விறகெரிக்க பயன்படுத்திக் கொள்வாள் அம்பிளி.*

*நினைத்துக் கொண்டே மடியில் இருந்து எடுத்த கரும்புத் துண்டை இன்னொரு கடி கடித்தபடியே... கண்களில் உப்பு நீர் வடிய..." இல்ல பூமாரி... என் புள்ள தவறியெல்லாம் விழுந்திருக்கவே மாட்டான். நானே பாத்திருக்கனே... அவன் ஏறி இறங்கற லாவகத்தை. கண்டிப்பா பொறாமை புடிச்ச யாரோ ஒருத்தன் இழுத்து தான் விட்ருக்கனும். வஞ்சம் வெச்சவன் பண்ணுன காரியம் தான் அது. என்ன செய்ய... கேட்டதுக்கு ஒருத்தனுக்கு*

தெரியலன்னு சொல்லிட்டானுங்களே. இழுத்து விட்ட அந்த கையைக் காட்டு சிந்தான்னுதான் தினமும் வேண்டறேன்... கரும்பு தான் கிடைக்குது... கை கிடைக்க மாட்டேங்குது..."

மூக்கை உரிந்தபடியே தோழி பூமாரியிடம் பேசிக்கொண்டே கடலைக்காய் பறிக்கும் அம்பிளியின் அருகே சத்தமில்லாமல் கடலை பறித்துக் கொண்டிருந்த சந்திரனின் கை சட்டென குறுகி கொண்டு நகர்ந்தது.

—

*கவிஜி.*

---

# பிறந்தநாள் வாழ்த்து

*மனிதர்கள் வாழ்த்தாவிட்டாலென்ன?*

*பனிப்பூக்களைத் தந்து*
*வானம் வாழ்த்துகிறது*

*பூக்களை உதிர்த்து*
*மரம் வாழ்த்துகிறது*

*கானம் பாடி*
*குயில்கள் வாழ்த்துகின்றன*

*மற்றவர்களுக்கோ*
*அவனுக்கோ தெரியாவிட்டாலென்ன*

*இயற்கை வாழ்த்தட்டும்*
*அவனுக்கும் உண்டு*
*பிறந்தநாள்!*

*சிலர் ஒதுங்குகிறார்கள்*
*சிலர் திட்டுகிறார்கள்*
*நாய்களும் குரைக்கின்றன*
*எது தடுத்தாலும்*
*பாதையை அவனுக்குத்*
*தந்து கொண்டே இருக்கிறது*
*பூமி.*

—

*சா.கா.பாரதி ராஜா,*
*38-3, கைலாசநாதர் கோயில் தெரு,*
*பெரிய நத்தம்,*
*செங்கல்பட்டு - 603002.*
*9944315732*



# நட்பின் வெற்றி..!

நண்பர்கள் இல்லாத வாழ்க்கை நரம்பற்ற வீனைக்கு சமம் என்பார்கள். நரம்பு இல்லாத வீணைக்கும், விறகு கட்டைக்கும் வித்தியாசம் இல்லை. அதுபோல நல்ல நண்பர்கள் இல்லாத வாழ்க்கை மகிழ்ச்சியில்லாதததது.

நல்ல நட்பை கொண்ட நண்பர்களை பெற்றவர்கள் வாழ்வில் வெற்றியை பெறுவது எளிதாகிறது என்றால் அது மிகையாகாது. வரலாற்றில் ஏன் இதிகாசங்களில் கூட சிறந்த நட்பு போற்றப்பட்டுள்ளது. மகாபாரதத்தில் கர்ணன் தான் அவமானபட்டபோது தனக்கு ஒரு நாட்டை அளித்து தன்னை அனைவர் முன்பும் அங்கீகரித்து தன்னை நண்பனாக ஏற்றுக்கொண்டான் துரியோதனன் என்பதற்காகவே, அவன் தர்மத்திற்கு புறம்பானவன் என்று தெரிந்தும் தன் நண்பனுக்காக அவன் கூடவே இருந்து போரிட்டு மாண்டும் போனான்.

உலக சரித்திரத்தில் மார்க்சீச கொள்கையை செதுக்கிய கார்ல் மார்க்ஸ் 35 ஆண்டுகள் நூலகத்திலேயே கிடந்த போது அவருடனான நட்பின் காரணமாய் ஏங்கல்ஸ் அவருக்கு உறுதுணையாய் இருந்து, நண்பனாய் உதவி கார்ல் மார்க்ஸ் உடன் சேர்ந்தே பொதுவுடமை அறிக்கையை தயாரித்தால் இருவரும் சேர்ந்தே உலக புகழ் பெற்றனர், இவர்களெல்லாம் சிறந்த நட்பின் சில உதாரணங்கள்.

"நட்பு என்கிற வார்த்தையே எனக்கு பிடிக்காது "என்று கூறிய மாவீரன் நெப்போலியன் கடைசி காலத்தில் ஆள் அரவமற்ற அட்லாண்டிக் கெலினா தீவில் நண்பர்களே இன்றி நோயுற்று அனாதையாய் சாட்சி கூட இல்லாமல் செத்து போனான் என்பது வரலாறு.

எனவே நல்ல நண்பர்களை பெறுங்கள், நீங்கள் அவர்களுக்கு நல்ல நண்பர்களாக இருங்கள்.

இன்பம் மற்றும் துன்பம் எது வந்தாலும் அவர்களிடம் பகிர்ந்து கொள்ளுங்கள், இருத்தரப்பு ஆலோசனைகளையும், நல்ல சிந்தனைகளையும் விவாதியுங்கள், எது சரி? எது தவறு? என்பதனை விட்டுக்கொடுத்து முடிவு செய்யுங்கள், சேர்ந்தே பயணியுங்கள் உங்கள் வாழ்க்கையும் நட்பும் சேர்ந்தே வெற்றிபெறும்.

—

முனைவர். சா.சம்பத்,
தேசிய பயிற்சியாளர்
மற்றும் உளவியல் ஆலோசகர்.
மன்னார்குடி.



# பனிக்கூழ் காதல்

நம்மைப் போலவே
எங்கோ...
ஒரு புள்ளியியல்
முத்தமிட்டுக் கொள்ளும்
விரிந்த வானமும்
பரந்த பூமியும்.

/
உன்னிடம் பிடிக்காததே
இந்த இறுக்கம்தான்.
சற்றே தளர்த்தி
கட்டவிழ்த்திடு
தாயின் மடிசேர்ந்த
சேயாய்க் கொஞ்சட்டும்
குலாவட்டும்
நம் காதல்...!

/
உனது
விருப்பமும் வேண்டும்
அதே நேரத்தில்
பின்னூட்டமும் வேண்டும்
உன் விரல் தீண்டா
என் முகநூல் பக்கங்கள்
விம்மியழும் கோரங்களை
காணலாகாது என்னால்.

/
இந்த நிலை
மாறுமென்கிறார்
என் கையைப் பார்த்த
ஜோதிடர்.
அவருக்கென்ன தெரியும்
காதல் பித்து
என்னாயுளுக்கும்
தீரவே தீராதென்று...!

/
மந்திரமாய்
உனது பெயரை
ஜெபித்த கிருபைக்கே
உன் பெயர்ச் சொல்லி
துடிக்குதென்னிதயம்...!

/
நிச்சயமாகத் தெரியும்
நீ உடனில்லாத
இவ்விரவை
அவ்வளவு எளிதில்
கடக்க விடாது
கலவரம்
நிரம்பிய உறக்கம்.

/
ஏறி மிதிக்கிறாய்
இறுக்கமாய் நசுக்குகிறாய்
துளியும் அசரவில்லை
இறுமாப்பில் எக்களிக்கும்
என் ரசநெஞ்சு.

/
இதற்கு
சொன்னது யாரென
தெரியவில்லை.
இப்படியா
அடம்பிடிக்கும்
சிறுபிள்ளையாய்...
உன் காதலைக் கேட்டு
என் இளமனம்.

/
கொடுப்பதற்கென

எடுத்துவிட்டாய்.
உருகும்முன்
குளுகுளுவென கொடுத்திடு
உன் பனிக்கூழ் காதலை.

/
திரும்பத் திரும்பத்
தின்னுகிறேன்
சுவை குறையாமலும்
திகட்டாமலுமிருக்கிறது
உன் தீராக்காதல்.

/
உன் புன்னகைக்கு
ஊதியமாய்
என் காதலைத் தருகிறேன்
இடைவெளியின்றி
நகைத்துக் கொண்டிரு.

/
சுடரேற்ற தீக்குச்சி போதும்.
பற்றியெரியும்
விழிரெண்டும் உனது.

/
நீ நெருப்பள்ளி வருகிறாய்
என் விரல் முழுவதும்
ரணங்கள்.


/
இதற்குமுன்
இவ்வளவு மோசமாய்
சப்தமின்றி மௌனத்தால்
யாருமென்னை சபித்ததில்லை.

/
என்னை
அழவைத்துக்கொண்டிருக்கும்
வறுமையை நிச்சயம்
ஒரு நாள் அழவைப்பேன்.

-
கவிதைகள் ஆக்கம்,
பாரியன்பன் நாகராஜன்,
குடியாத்தம் - 632602.
கைப்பேசி: 9443139353



**மா. நிரல்யா,**
**சிங்கப்பூர்.**



# பொருண்மை: (பாசத்தின் வலிமை)

கோபால்பட்டியில் வழக்கம் போலவே காரிக்கிழமை ஆட்டுச் சந்தை கூடியது.

"மணிவேல் ஐயா, நீங்க சந்தைக்கு வந்துருக்கீங்க! எதுவும் விசேமா?"

"பொன்னையா, உன்னைய பார்க்கணும்னு நினைச்சிக்கிட்டே இருந்தேன்.இப்ப பார்த்துட்டேன்!"

"ஐயா, சொல்லுங்க. உங்களுக்கு நான் என்ன உதவி செய்யணும்.கண்டிப்பா செய்றேன்."

"எனக்கு ஒரு பெரிய ஆடு வேண்டும்.இன்னும் பத்து நாள்ல என் மகளுக்கு கல்யாணம் பொன்னையா!"

"மிக்க மகிழ்ச்சிங்க ஐயா! எல்லாமே நல்லபடியா நடக்கும்.கண்டிப்பா நான் வாங்கித் தர்றேன்."

மணிவேல் ஐயா எதிர்பார்த்த அளவிற்கு சந்தையில் ஆடுகளின் வரத்து ஏதுமில்லை.வெகு நேரமானதால் சந்தை கலைந்தது. இருவரும் பேசிக் கொண்டே வெளியில் வரும் தருணம். அங்கே முதியோர் இருவரின் கையில் மணிவேல் ஐயா எதிர்பார்த்த ஆடு ஒன்று விற்பனைக்காக காத்திருந்தது.

"அம்மா, இந்த ஆடு விற்கிறீங்களா?"

"ஆமாங்க, ஐயா. உங்களுக்கு வேண்டுமா?"

" என்ன விலை? அம்மா, சொல்றீங்க."

"இருபதாயிரம் மட்டும் கொடுங்க. ஐந்து வருசம் வளர்த்த ஆடு. எங்க புள்ள மாதிரி வளர்த்தோம். எங்க மகள் கல்யாணத் தாலிக்கு பணம் பத்தல. அதுதான் விற்கிறோம்." என்று கண்ணீரோடு விலையை சொன்னார்கள்.

"பொன்னையா, இந்த ஆடு எனக்கு சரியாக இருக்கும்.நான் சொல்றது சரிதானே!"

"ஆமாங்க ஐயா, நானும் அதைத் தான் சொல்ல நினைச்சேன்.அவங்களுக்கும் உதவியாக இருக்கும்.நமக்கும் நல்ல ஆடு கிடைக்கும்."

முதியோர்கள் சொன்ன விலைக்கு அந்த ஆடு வாங்கப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டது.

மகளின் திருமணத்திற்காக அழைத்துச் சென்ற அந்த ஆட்டுடன் மீண்டும் அடுத்த காரிக்கிழமையன்று அதே சந்தையில் அந்த முதியோர்களைத் தேடி, மணிவேல் ஐயா வந்தார்.

"மணிவேல் ஐயா வாருங்கள். திருமண நிகழ்வு ஏற்பாடுகள் எப்படி நடக்கிறது.கையில் சென்ற வாரம் நீங்க

வாங்கிய ஆடு தானே இது? ஏன் என்னாச்சு?"என்று பொன்னையா கேள்விகள் கேட்டார்.

"பொன்னையா நான் விவரமாக சொல்லுறேன். ஆட்டை உற்றுப் பார்த்தாலே உனக்கு தெரியும். கடந்த வாரம் வாங்கிய ஆடு, இப்ப இரண்டில ஒரு பங்குதான் இருக்கு. நான் வாங்கி போன நாளிலிருந்தே இதுவரை எதுவுமே சாப்பிடல.

இந்த விசயம் என்னையும் என் குடும்பத்தாரையும் ரொம்பவும் பாதிச்சுருச்சு. தன்னை வளர்த்த எஜமானர்களையும், இந்த ஆட்டுடைய பாசத்தின் வலிமையையும் நாங்க நல்லாவே உணர்ந்துட்டோம்."

இருவரும் இணைந்து அந்த முதியோரின் இல்லத்தை ஒரு வழியாக கண்டுபிடித்தனர்.

"ஐயா, நலமா? வாங்க...வாங்க... ஏதேனும் பிரச்சினையா?" என்று முதியவர் கேட்க... சப்தத்தை கேட்டவுடன் துள்ளிக்குதித்து அவர்களிடம் சேர்ந்து அவர்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் தள்ளியது தன் வளர்ப்பு ஆடு.இன்னும் அவர்களைப் பார்த்தவுடன் உணவுகளைத் தேடி உண்டு வயிற்றையும் நிரப்பியது.

"உங்க வளர்ப்பு வீண் போகல ஐயா. உங்க ஆட்டை உங்களுக்கே தர வேண்டும்னு என் மகளோட கட்டளை. அதுமட்டுமா இந்த ஆட்டிற்கு எந்த பணமும் வேண்டாம்னு என் மனைவியின் வேண்டுகோள். உங்களோட மகளின் திருமணம் நன்றாக நடைபெறணும் என்பதே எனது ஆசை."

என்று மணிவேல் ஐயா கூறிக் கொண்டே ஆட்டோடு சேர்த்து ரூபாய் பத்தாயிரத்தையும் கொடுத்து ஒரு ஏழைப் பெண்ணுக்காக எங்களை உதவி செய்யத் தேர்ந்தெடுத்த இறைவனுக்கே எல்லாப் புகழும்! என்று கூறி தன் மகளின் திருமணத்திற்கு அழைப்பையும் கொடுக்க, குறித்த நாளில் திருமணமும் சிறப்பாக நடந்தது. அடுத்த சில தினங்களில் முதியோரின் பிள்ளையின் திருமணத்தையும் மணிவேல் ஐயா குடும்பத்தினரே முன் நின்று வெகு சிறப்பாக நடத்தியும் வைத்தனர்.

முற்றும்

—

வாழ்வியல் கவி,
சா. நாகூர் பிச்சை,
திண்டுக்கல்.



# 1. ஆசீர்வதிக்கப்பட்ட தினத்தில்

வனம் அதிர ஓடி இளைத்து
நிலம் துடிக்க மூச்சு வாங்கி
பூவும் காற்றும் மிதந்து விழ
இணைகோடுகளுக்கு மத்தியில் இருளின் துணையுடன்
ஜல்லிக்கற்கள்
செவ்வண்ணம் பூசை
வினாடி வேக ரயிலின் மருத்துவத்தில்
இனிதே(!)அரங்கேறியது
கர்ப்பிணிக் களிறின்
கல்லறைப் பிரவேசம்.

## 2. நிலம் வெடித்து புதையுண்டு போன

பயிருக்குள் மாண்டு போகிறது
வயிற்றையும் வாழ்வையும்
தொலைத்தவன் கனவுகள். வெக்கையைக் கக்கி
வேடிக்கை பார்த்தபடி
வானத்தில் நடக்கிறான் வெய்யோன்.
கண்ணீரைப் புதைத்துக் கொண்டு
கலைந்து கலைந்து
காணாமல் போகிறது மேகக்கூடல்.

## 3. இருட்டை விழுங்கி

வெளிச்சத்தைப் பிரசவிக்கிறது கருவறை.
வெளிச்சத்தை ஜீரணித்து
இருட்டைப் பரிசளிக்கிறது
கல்லறை.
இடையில் அழுது ஆர்ப்பரித்து
கரைபுரண்டு கல்லடி பட்டு
பொங்கிப் பிரவகித்து
அமைதியில் தவழ்ந்து
மேடு பள்ளம் கடந்து
தன்னை ஒளியூட்ட ஓடுகிறது
வாழ்வு நதி..

—

இளையவன் சிவா,
மடத்துக்குளம்.



# தீர்ப்பு

நல்ல செல்வ செழிப்புடன்
வாழ்ந்து வந்த
தந்தை தள்ளாத
வயதிலும் தன் மூன்று
மகன்களுக்கும்
திருமணம் நடத்தி,
நீங்கள் மூவரும்
பிரியாமலும், ஒருவருக்கொருவர்
விட்டுக் கொடுக்காமலும்
ஒற்றுமையாய்,
இந்த உலகம் போற்றும்
வண்ணம் வாழ
வேண்டும் எனக் கூறி
இறந்து விட்டார்.

ஒரு சில மாதங்களிலேயே
மூவருக்குள்ளும்
சண்டை மூண்டது.
ஒருவருக்கொருவர்
தினமும் கலகம் செய்து
அடிதடியில் ஈடுபட்டனர்.

இதற்கு ஒரு முடிவுக்
கட்ட வேண்டுமென
கூறி, அந்த ஊர்
நாட்டாமையிடம்
சென்றனர்.

உங்கள் பிரச்சனையை
நான் தீர்த்து வைக்கறேன்.
ஒவ்வொரும் உங்கள்
பிரச்சனைகளை
தனித்தனியாக
கூறுங்கள் என
நாட்டாமைக் கூறியதும்
முதலாமவன் உடனே
எழுந்து "எனது இரண்டாவது தம்பியை
ஊரைவிட்டு அனுப்பி
விடுங்கள்" என்றான்.

அதற்கு இரண்டாமவன்
என் அண்ணன் குடும்பத்தை
வேரோடு அழித்து
விடுங்கள் என்றான்.
அடுத்து நாட்டாமை
மூன்றாமவனை பார்த்து,
அவர்கள் இருவரும்
கூறிவிட்டனர்.

உனக்கு நான் என்ன
செய்ய வேண்டும்
எனக் கேட்டார்.

அதற்கு மூன்றாமவன்
"அவர்கள் இருவர்
சொன்னதை முதலில்
நிறைவேற்றுங்கள்"

அதுவே எனக்கு
போதும் என்றான்.

முற்றும்

—

மு. ஜெரோஷா,
எழுத்தாளர்,
திருப்பூர்.

# தூரிகை

தலைவாருவதைப் போல அல்ல
மீசையை வாருவது
அதில் இருக்கும்
அலகால் தன் சிறகை
தானே கோதும்
பறவையின் அழகு

பிறர் காணும் போது
கண்ணாடியைப் பார்த்து
தலைவாரவே வெட்கும் நாணம்
மீசையை வார கூடுதலாக
வெட்கிப் பூக்கும்
முறுக்கி விட்டால் வெட்கம் தோற்கும்

சீப்பால் மீசையின் இருபுறமும்
கீழ்நோக்கி சீவி படிய விட்ட பின்
மேலுதடு என்னும் குவிபிறையை
மறைத்துக் கொள்ளும்

அதே வடிவத்தில் இருக்கும்
மீசை என்ற கருமேகம்

அவளுக்கு என்னை விட
முடி அதிகம்
அவளுக்கு ஜடை
தொடை வரை
எனக்கோ எலிவால்
என்பன போன்ற
கூந்தல்களின் அழுக்காறுகள்
மீசைகளுக்கு இல்லை

அது ஒவ்வொரு ஆணின்
தனிப்பட்ட தாரகை
தனித்துவமான தூரிகை.

- மு. ஆறுமுகவிக்னேஷ்,
சத்திரப்பட்டி,
விருதுநகர் மாவட்டம்.

---

# பறக்கும் பட்டாம்பூச்சி

காற்றில்  கலந்திருக்கும்
பூக்களின் வாசம்.

பூக்களை நுகர்கிறேன்
பட்டாம்பூச்சி  வாசம்.

பூங்காவுக்குள் நுழைகிறேன்
எனது வருகையை பூக்களிடம்
தெரிவிக்கும்  பட்டாம்பூச்சி.

அனைத்து பூக்களையும்
முத்தமிட. இலவச அனுமதி
பட்டாம்பூச்சிக்கு.

நம்மைப் போலவே
இரண்டு பெயர் கொண்டது
பட்டாம் பூச்சி (எ) வண்ணத்துப்பூச்சிக்கு.

பறக்கும் முத்தங்களை
பறித்துச் செல்வதில்
பலே கில்லாடி
பட்டாம்பூச்சி.

—

ஆனந்தன்,
திருப்பூர்.



# உன் குறுஞ்செய்தி...

என் நெடும் தவத்திற்கான வரமாய்
பால் வெளியில் விரிகின்றதுன்
குறுஞ்செய்தி
இதோ... இதோ..

எங்கள் மௌனச்சமர் ஒழிக்க ஒரு
சமாதானத் தூதுவனாய்
உன் குறுஞ்செய்தி
என் வாசலில் வாசனையுடன் வந்தமர்ந்து
கொண்டது

வியாபித்திருந்த நேசப்பூரிப்புக்கள்
விழியகன்று நகர்ந்த நாழிகைகளின்
கனதியினைக் கலைந்தெறியச் செய்து
கண்ணீர்த் துடைத்து விட
வந்ததென்றெண்ணிக் கொள்கிறேன்

திசைமாறிய பறவையொன்று
கூடடைதலின் சுகத்தில் திளைக்கிறேன்
தறிக்கப்பட்ட தருவொன்று
துளிர்த்ததலின் ஆனந்தம் எனக்குள்
நீள்கின்றது
இறகொடிந்த வண்ணத்துப்பூச்சி மீளப்
பறத்தலின் பரவசம் எனக்குள்
படர்கின்றது.

இடைவெளிகளால்
இடர்பட்டுக்கொண்டிருந்த இதயத்தை
இந்தக் குறுஞ்செய்தி
ஆசுவாசப்படுத்திக் கொண்டிருக்கின்றது

இன்றுன்
குறுஞ்செய்தி என்னவெல்லாம்
செய்கின்றது பார்த்தாயா...
பெருந்துயரொன்றின் சுவடகற்றி
என்னை எனக்கே மீட்டுத்
தந்திருக்கின்றது
விழிக்குள் விழுந்து இதயம் நுழைந்து
பிரியத்தைப்
பரிசளித்துக்கொண்டிருக்கின்றது அன்பே
உன் குறுஞ்செய்தி.

—

மக்கொனையூராள்.

# பிருந்தாவனம்

ஒவ்வொருப் பெற்றோரும்
உடல்நலன் பாதிக்கப்பட்ட
தங்கள் குழந்தைகளை
அழைத்து வந்ததும்
கோபாலர்கள் கொஞ்சும்
பிருந்தாவனமானது
அந்த
குழந்தைகள் மருத்துவமனை

--

இரா. மதிராஜ்,
தொடர்பு எண்: 97884 75722.
3/78 அலப்பட்சக் கவுண்டன் புதூர்,
காங்கேயம் 638701.
திருப்பூர் மாவட்டம்.

# கண்ணே கண்ணம்மா...

அன்பே....
வார்த்தைகள் தேடுகின்றேன் என் மனதில் உள்ள மாற்றங்களை சொல்ல...

என் தமிழும் தடுமாறுகிறது...

என் மனதில் உள்ள மாற்றங்களை உறக்க சொல்ல...

அன்பே...
என் வாழ்வின் நான் மிகுந்த மகிழ்ச்சி கொண்ட தருணங்கள் சிலவே..

ஆனால் பெருமகிழ்ச்சி கொண்ட தருணம் உண்ணுடன்னான இந்த காதல் தருணங்களே...

உன்னை பார்த்த அந்த நொடி
என் மனதில் ஏற்பட்ட மாற்றங்கள் பல...

பூவை ரசிக்க தெரியாத எனக்கு பூவை உன்னை மட்டும் எப்படி ரசிக்க தோன்றியது...

ஆச்சரியமே...
மார்சரியங்கள் பல கண்டவன் நான் ...
ஆனால் வெட்கம் என்ற வார்த்தைக்கு உன்னை கண்டபின் ஏனோ அர்த்தம் கண்டேன்...

என் தமிழும் குழப்பம் கொண்டது
என்னவன் என்னிடம் புது புது வார்த்தைகளுக்கு அர்த்தம் கொள்கிறான் என்று...

கண்ணே
இது என்ன மாற்றம்..

எதை கண்டாலும் உன் முகம் என் மனதில்...

இது எண்ணவலுக்கு என்ற எண்ணம் மேலோங்க அது இன்னும் அழகாக தெரிகின்றது கண்ணே...

பூவை கண்டாலும் உன் முகம்...
பூவைகளை கண்டாலும் உன் முகம்...

அர்த்தம் மற்று சிரிகின்றேன்....
அளவின்றி மகிழ் கின்றேன்
உன் நினைவு வரும் போது...

ஒரு வேளை இது தான்
காதலா புரியவில்லை ...

ஆனால் நீ இன்றி இனி என் வாழ்வு இல்லை என்பதே நிதர்சனம் கண்ணே...

உன்னை அளவு கடந்து
கடலின் ஆழம் கடந்து
காதல் கொண்டேன் ..காதலிக்கிறேன் கண்ணே...

கண்ணம்மா....

—

கவிபாரதி. சதீஷ்
விருதை.

# துளிப்பாக்கள்

இலையின் முகத்தில் பருக்கள்
ஓ...! பருவம் அடைந்ததோ?
பனித்துளிகள்.

காதல் புத்தகத்தின்
கிழிந்த பக்கங்கள்
கருக்கலைப்பு

வெட்டி விடாதீர்கள்
நடப்பட்ட மரக்கன்று
உலக தண்ணீர் தினம்

சூடு பிடிக்கிறது
பிளாட்பாரத்தில்
குடை மழை

தேர்வு முடிந்தது
விடை பெறுகிறான்
அலங்கோலத்தில் வகுப்பறைகள்

அந்தி கருக்கலில்
சாய்ந்து கிடக்கிறது
பகல் கனவுகள்

காற்றில் என்னவோ
எழுதி வைக்கின்றன
அடடே! மரக்கிளைகள்

## இரசித்தல்

ஆழியாடும் அதனூடே
கெண்டைஆடும்
மரக்கிளைகள் கூத்தாடும்
மந்தியது மருண்டோடும்...

கானகத்து பெருவெளியில்
பாஷையறியா மாக்களாட...!
கருமேகம் ஒன்றிணைய
மனமுவந்து மயிலாடும்....

வானகமோ நீரருந்த
மழையிறங்கி மன்றாடும்
பூவனங்கள் பூத்திருக்க
பூவிற்குள் புயலாடும்...!

மதுவுண்டு களியாடும்
மதியிறங்கி கூத்தாடும்
கதகளியில் மெய்யாடும்
பரிணமித்தே உயிராடும்...!

ஊணுறங்கும் ஓசையிலே
உயிருறங்கும் பாஷையிலே
தேனருந்தும் உவப்பினிலே
வண்டாடும் ரீங்கினிலே...!

சொல்லுக்குள் சொல்லாடும்
சொற்பிழன்று கூத்தாடும்
வண்ணங்கள் வழிந்தோட
எண்ணங்கள் விரிந்தாடும்..!

காற்றிடையே
கீறல் விழ
கனவுகளில்
தூரல்விழ......!

மந்திவாயில்
பழங்கள் விழ
மரக்கிளையில்
மயில்கள்விழ.....!

மரத்தின்கீழே
நான்விழ
மயிற்றோகை
என்னில்விழ...!

விண்ணிடையே
முழக்கம்விழ
விழிபிதுங்கி
நான்எழ.....!

பதற்றத்தில் மனமாட...!

மனமிறங்கி உறவாட...!
பகலிறங்கி இரவாட..!
போர்மூண்டு பகையாட....!
புவனத்தே நீயாட....!
இரசித்திருப்பேன்
விழியாட....

—

ஞா.முனிராஜ்,
அருப்புக்கோட்டை.

---

# நிலா வெளிச்சம்,

யாருக்கும் தெரியவில்லை,
துன்பத்தில் ஆட்காட்டிப் பறவை.

## தூரத்து நிழலில்.

குடத்தில் தண்ணீர்,
மரத்தை வெட்டியவனுக்கு.

## கோடை வெயிலை பொறுத்துக்

கொண்டப் பிறகு,
மிக அழகாக தெரிகிறது,
அந்தியில் சிவந்த சூரியன்.

## என்னைத் தேடித்தேடி வருகின்றார்கள்,

சாதிமத வேறுபாடுகளின்றி,
மரங்களின் நிழல்.

## சென்று திரும்புகையில்,

மனம் கேட்கவில்லை,
நிரம்பி வழியும் குடம்.

நன்றி.

—

அ. செல்வராஜ்,
2/172. கண்ணமநாயக்கனூர்.
உடுமலைப்பேட்டை தாலுகா.
திருப்பூர் மாவட்டம்.

# 1. இப்படியான உங்களிடம்...

நியாயம் இரண்டு நாட்களில்
கிடைத்துவிடும் என்பீர்

மனுக்களின் விசாரணையைத்
தள்ளிவைத்து
நீதிசாக மருத்துவம் பார்ப்பீர்

சந்தேக மரணத்தைக்
காசுக்காய் விற்று
நாறும் பிணம் தின்பீர்
எதிர்த்துக் கேட்கும்
குரல்வளை நசிக்கி
இளஞ்சூடாய் தேநீர் பருகுவீர்

சட்டைப்பையில் இருக்கும்
சட்டத்தைக்கொண்டு
எலும்பை எண்ணுவீர்
ஏமாறப் பிறந்தவர்மேல்
நயவஞ்சக மலம் வீசுவீர்

கதறி அழுபவர் முகங்களைக்
கண்ணார இரசித்து நகைப்பீர்

காயங்களின்மேல்
சாராயம் ஊற்றி
பொங்கும் நுரையினால்
கண்ணீர்த் துடைப்பதாய்
நாடகம் நடிப்பீர்

வனங்களை அழித்துவிட்டு
நெடுஞ்சாலை நடுவில்
பறவைகளின் கூடமைப்பீர்
காரியவாதியாகிக் காலைப்பிடிப்பீர்
வேலைமுடிவில் அனைத்தையும் உருவி
அம்மனமாக்கி மகிழ்வீர்
சுயநலத்தின் குச்சுமிட்டாயை
விரும்பிச் சப்பிச்சுவைப்பீர்
பொதுநலத்தின் கற்பைக்
கூட்டாய் சேர்ந்து சூறையாடுவீர்
விலைக்கு ஏற்றார்போல்
மானம் சூடு சுரனை விற்பீர்
கருமாந்திரம் பலசெய்து
காவியில் அலைவீர்
அன்னக்கைகளை கூட்டுச்சேர்த்து
அகாஜுகா செய்து காலங்கழிப்பீர்
அங்கும் இங்கும்
முன்பும் பின்பும்
உள்ளேயும் வெளியேயும்
அலைந்துத் திரியும்
இப்படியான உங்களிடம்
ஒரு மயிரையும்
எந்த மட்டையையும்
எதிர்ப்பார்ப்பதாய் இல்லை நான்.

## 2. செவிகளிருந்தும்

சின்ன வயசிலிருந்தே
ஒன் சித்தப்பனும் நடாப்பாவும்
கார்க்கோடனுவ
திருதராட்சிதரனுவ

பெரியவரா பொறந்தாலும்
ஊரு ஒலகம் அறியாத
வாய்செத்தப்பூச்சி ஒங்கப்பாவ
எப்படிலாம் ஏமாத்தமுடியுமோ ஏமாத்தி
வாஞ்சியில இருந்தது
வில்லாம் பாளையத்தியில இருந்தது
எல்லாத்தையும் முழுங்கி

ஏப்பம் உட்டுட்டானுவ

என்னக் கட்டிக்கினதுக்கு அப்புறம்
நமக்குனு உட்டதையும் புடுங்க
காட்டுனு எடுத்தல
கையெழுத்துப் போடலன்னு
என்னையும் ஒங்கப்பாவையும்
ஊட்டுல சேர்க்காம
ஊர்ஊரா தெருத்தனானுவ
தெருத்தெருவா தாதுகலங்கவுட்டானுவ
ஒக்காந்து ஒருவா கஞ்சிக்குடிக்கவுடாம
காட்டுலயும் மேட்டுலயும்
கண்ணீரோட தவிக்கவுட்டானுவ

எவன் குடிய கெடுக்கலாம்
எவளக் கூத்தியாளா வச்சிக்கலாம்
எந்த மரத்துக் கள்ளு குடிக்கலாம்
ஒடம்பு நோவாம
மேங்குஸ்தா எப்படி பொழைக்கலாம்
வாய்க்கு ருசியா
எப்படி வழிச்சி நக்கலாம்
வெள்ளையா வேட்டிச்சட்ட கட்டிக்கினு
வெட்டி நாயம் பேசி
வேலி மேயலாம்
சமயத்துக்கு ஏத்தமாரி
சாயகாலாப் போயி
கைநெறைய காசை இரப்பலாம்
கேடுகெட்ட புத்தியோடவே
சுடுகாடு வரைக்கும்
சுத்தித் திரிஞ்சானுவ

குறுக்குப்புத்தி
குள்ளநரித் தொழில்
பொறாமை
பொச்சரிப்பு
கலகம்
கரப்போக்குத்தனம்
வஞ்சகம்
வன்மம்
துரோகம்
துஷ்டம்ன்னு
இரத்தத் திமுருல
ஆடாத ஆட்டம்லாம் ஆடி
அங்கத்திருடி
இங்கப் பதுக்கிப்
பொட்டிப்பொட்டியா சேத்தது
எல்லாத்தையும்
போவக்குள்ள வாரிக்கினா போனானுவ?
ஒன்னு இல்ல.

ஒருத்தன்
நல்லா நடமாடிக்கினு இருக்கும்போதே
நடுவூட்டுல
நெஞ்சிவெடிச்சிச் செத்தான்
இன்னொருத்தன்
தாள் புத்துவந்து
ஊருல தலைகாட்டமுடியாம
உத்திரத்தில மாட்டிக்கினு
போய்ச்சேர்ந்தான்

பண்ணிய பாவமும்
வாங்கனச் சாபமும்
எடையிலா நின்னுடும்?
வழிவழியா வளர்ந்து
கொடிகொடியா கெளைச்சி
பத்துத் தலைமுறைக்கும்
பாம்பாவந்து கொத்தாது?

நான் பொறந்த எடமும் கோட்ட
புகுந்த எடமும் கோட்ட
இல்லன்னு வந்தவங்களுக்கு
இல்லன்னு சொன்னதில்ல
மனசறிஞ்சி மத்தவங்களுக்குக்
கெடுதி நெனச்சதில்ல

மரியாதக்கொறவா பேசனதில்ல
எல்லாரும் நல்லா இருக்கனுன்னு
சாமிய வேண்டனும்
நாமமட்டும் நல்லா இருந்து
மத்தவங்க களங்கி நின்னா
பேயர மழையும்
வெளையர நெலமும்
வாழுர ஊரும்
வசந்தமாவா இருக்கும்
சாட்டக் கையால
காக்கா ஓட்டாதவன்
சாவும்போது சங்கரா சங்கரான்னு
பொலம்பி என்ன ஆவப்போவுது
அளவுபார்க்காம அஞ்சிவெரலுக்கும்
அன்னத்த தந்தாத்தான்
அங்கம் நெறையும்
ஆத்துமா குளிரும்

நல்லது சொல்லி வளர்த்த
ஆயாவைப்பற்றி அங்கலாய்க்கும்
அம்மாவின் அறிவுரைகள்
ஆட்டுக்கொட்டகைக்கும்
அடுப்பங்கரைக்கும்
வீட்டுவாசலுக்கும்
வெளக்குமாறு மொறத்துக்கும் மாத்திரம்
மந்திரம்
செவிகளிருந்தும் செல்லிடைப்பேசியில்
மூழ்கிப்போன
உங்களுக்கும் எனக்குமல்ல.

## 3. வாழ்தலின் வேர்

நெடுங்காலமாய்
பூட்டுக்குள் சிறையிருக்கும்
திறவுகோல்களை மீட்க முயன்று
எதைக்கொண்டு தகர்த்தாலும்
தாழ்திறவா உறுதியில்
அதன் தலை பெருத்துள்ளது
கோட்டைக் கொத்தளங்களைக்
காக்கின்ற திமிர்
அதன் உடலெங்கும்
துருக்களாய் அப்பியுள்ளது
தண்டனைச் சாலைகளின்
அபத்தங்களை விழுங்கிச்
சினைத்தவளையாய் வயிறு
புடைத்துள்ளது
களவுபோகாமல்
கடவுளர்களைக் காப்பதினால்
செருக்கான பூதங்களின்
தொந்தியாய் வீங்கியுள்ளது
இரவெங்கும் மூடியுள்ள
இரகசிய அறைகளின் சிணுங்கள்களில்
புத்தி மழுங்கிய
அதன் உதடுகள்
வரண்ட பாறையாய் தடித்துள்ளது
பூனை கவ்விய எலியென
கடல் கவ்விய நதியென
மீள வாய்ப்பற்றுச்
சிக்கிக்கொண்ட திறவுகோல்கள்
பூட்டுகளின் புதைநிலத்தில்
வாழ்தலின் வேர்களை
வேறுவழியின்றி
விழுதுகளாய் பற்றியுள்ளன.

## 4. இராணிப் பசு

சிவராத்திரி கும்பிடல
அம்மாவாசை படைக்கல
மயானக்கொள்ளைக்குப் போவல
வெள்ளிக்கிழமையாச்சும்

வெளக்கேத்துனானா தெரியல
பொட்டச்சி ஒருத்தியில்லனா
ஊடு ஊடாவ இருக்குது
நேத்து மதியானம் போயி பார்க்கிறன்
ஊடுப்பூரா மொழங்காலு குப்ப
நீட்டாமயா வர்ரதும் போவதுந்தான்
ஆம்பளைங்க பொழப்பு
எப்படியிருந்த பொம்பள
குருவிக் குஞ்சா
பெட்டுலப் போயி படுத்திட்டா

காலுல மாவுக்கட்டுப்
போட்டிருக்காங்களாம்
சுகரு நானூத்தி அம்பது இருக்காம்
படுத்தேக் கெடக்கறதால
கொஞ்சங்கூட கொறைய மாட்டுதாம்
சனியன்
சென்மத்த செறுப்பால அடுச்சி
மூனு பொண்ணையும் கரையேத்திட்டா

கன்னிக்கழியாத புள்ளைய நெனச்சி
கலங்குறாளாம்
ஆம்பள மாதிரி வேலைசெய்வா
கூலி வேலைக்குப்போனாலும்
கவுடு சுவுடு இல்லாம
சொந்தக்கொல்லியாட்டம்
ஊழியம் பார்ப்பா
ஒறவுக்கு ஒன்னுன்னா
மொதல்ல வந்து நிப்பா
நான் ஒசத்தி நீ தாழ்த்தின்னு
பேதம்பார்க்க தெரியாதவ
எவ்வளவு பெரிய துன்பம் வந்தாலும்
கல்லுமாதிரியிருந்தவ
காலுல விண்ணமான ரண்டு நாளுலேயே
தூளா ஒடஞ்சிட்டாளாம்

துன்ன பேலன்னு சொகுசாயிருக்கும்
ஒசந்தவங்களுக்கு வர வியாதி
ஏழைபாழைக்கு எப்படி வருதுன்னு
தெரியல
எச்சம்கிட்ட சொல்லிட்டு
வேளையாட வாப்பா
சாய்ந்திரம் ஒரு எட்டுப்போயி
அக்காவப் பார்த்துட்டு வந்திடலாம்
மனசுகெடந்து தவிக்குது
ஒருவேலயும் ஓடமாட்டுது
தவுட்டுத் தண்ணீக் காட்டிக்கினு
தம்பிப் பொண்டாட்டிய நெனச்சி
அருவியாப் பெருகும் கண்ணீரை
முந்தானையால் துடைக்கும் அம்மாவை
நாக்கால நக்கி ஆறுதல் சொல்லியது
இராணிப் பசு.

—

பொன்.தெய்வா,
ஐவேலி.
விழுப்புரம் மாவட்டம்.



# நூல் விமர்சனம்: உயிர்வெளவல்...

நூலின் பெயர்: உயிர்வெளவல்
நூலாசிரியர்: ரகுநாத். வ
வெளியீடு: படைப்பு பதிப்பகம்
நூலின் விலை: 120
புத்தகம் வேண்டுவோர் தொடர்பு கொள்ளலாம்: 9080401086

'உயிர்வெளவல்' தலைப்பே மிக சிறப்பாக இருக்கிறது...


தலைப்பை தேர்ந்தெடுத்ததற்காகவே கவிஞரை பாராட்ட வேண்டும்•••

உயிர்வெளவல் என்ற சொல்லுக்கு என்ன அர்த்தம் என்று முதலில் தேடிப் பார்த்தேன்.

அது காட்டிய பாதை கலித்தொகையை சென்று அடைந்தது...

இப்போது கலித்தொகையிலிருந்து பார்ப்போம்.

ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடறிந் தொழுகுதல்
அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை
அறிவெனப் படுவது பேதையோர் சொல்நோன்றல்
செறிவெனப் படுவது கூறியது மறாஅமை
நிறைவெனப் படுவது மறைபிறர் அறியாமை
முறையெனப் படுவது கண்ணோடாது உயிர்வெளவல்
பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்.
(கலித்தொகை, 133)




கவிஞரின் கவித்திறன் சொற்ப் பயணம் அருமை...

தன் கவிதையில் புதுபுது சொற்கள் வார்த்தைகளை
சேர்ப்பதில் சிறந்தவராக திகழ்கிறார் கவிஞர் ரகுநாத். வ அவர்கள் ...

கவிஞரின் கவிதைகளை நான் ஏற்கனவே முகநூலிலும் பல இதழ்களிலும் நிறையவே படித்திருக்கிறேன் இப்போது புத்தக வடிவில் படிப்பது மிகவும் மகிழ்ச்சியை தருகிறது...

இப்போது கவிதையில் பயணிப்போம் வாருங்கள் ..

"பொம்மை பொம்மையாகவே
இருந்தது மகள் செல்ல
பெயர் வைத்து அழைக்கும் வரை "...

ஆகா முதல் கவிதையிலே கவிஞர் குழந்தை மனதோடு நம்மை மகிழ்விக்கிறார்•••

நாமும் அப்படி தான் இருந்தோம்...

"வந்த அலையை மிதித்துவிட்டு
வராத அலையை 'அதோ '
கடலென்கிறோம்"...

ஆமாம் கால்களை தழுவும்
கடலலைகளை ரசிக்காமல் தூரத்தில்
அமைதியாக இருக்கும் நீரை
கடலென்கிறோம்...

"ஐயனார் கழுத்திலிருக்கும் பூமாலையில்
தேனுறிஞ்சும் வண்ணத்துப்பூச்சி
அரிவாளுக்கு முத்தமிட்டு செல்கிறது"•••

அடடடே படித்ததுமே கவிதை
காட்சியாக விரிந்து மனதை
தொடுகிறது...

"ஆற்றைக் களவாடிய கூழாங்கல் தான்
வறட்சியில் சூரியனை உறிஞ்சிக்
கொள்கிறது"

ஆற்றையும் அதன் வறட்சியையும்
கவிதையில் கூழாங்கற்களை கொண்டு
நிரப்புகிறார் கவிஞர்...

"நீங்கள் புத்தன் ஆக வேண்டியதில்லை
புத்தகனாகுங்கள் போதும்"..

ஆம் இங்கு யாரும் புத்தனாக
வேண்டியதில்லை புத்தகங்களை
வாசித்தாலே போதும் நீங்களும் புத்தன்
தான் என்று புத்தனையும் புத்தகத்தையும்
நமக்கு கவிதையின் மூலம்
உணர்த்துகிறார் ...

"பறக்க ஆயத்தமாகும் பறவையினை
சிறைப்பிடித்தது கேமரா"...

வைக்கோல் தலைப்பாகை நகர்கிறது
'பஞ்சாப்' லாரி ...

சுத்தம் சோறு போடுவதில்லை
வயலில் இருக்கும் சகதிதான்
சோறுபோடுகிறது என்னும்
இவரின் கவிதிறனை வியக்கிறேன் ...

"மழைத்துளிகளில் கழன்று விழும்
வானை ஏந்திக் கொள்கின்றன
பிம்பங்கள் "...

"சிறிது பூமியினை மூடியவாறிருக்கிறது
கீழ் விழுந்த பாட்டில் மூடி" .....

என்ற ஹைக்கூ கவிதை சிறப்பை
தருகிறது...

"சிறைச்சாலை மாடியில் தினமும்
திறக்கப்படுகின்றன புறாக்கூண்டுகள்."

ஆக சிறந்த குறுங்கவிதையாக நான் இதை
பார்க்கிறேன் ...

படைப்பு பதிப்பகம் வெளியீடாக
வந்திருக்கும் உயிர்வௌவல் இன்னும்
நிறைய படைப்புகளை படைக்க
வேண்டும் என்று கவிஞர் அவர்களை
கேட்டுக் கொள்கிறேன்... வாழ்த்துகளும்
நன்றிகளும் ..

—

அன்புடன்,

கவிஞர் ச. இராஜ்குமார்,
8867933021

# நிழலொரு அச்சாணி

தனிமரம் தோப்பாகாது எனக்கூறி
விடைப்பெற்ற அப்பனின் பாத்த்தின்
முன்னே நூறு விதை கொண்ட கனியின்
அங்க பிரதசனம்....

நிழல்களை தேடிடும் வெளையில்
உதிர்ந்த இலைகொண்ட கிளைக்கு
இறகினை படரச்செய்கிறது
முந்தைய நாளில் முட்டைக்குள் உறங்கிய
பறவையொன்று....

இரு முதுகுகளை தாங்கி
காதல் உரசலில்
ஒவ்வொன்றாக உதிரத்தொடங்கின
மலர்களாய் இலைகள்....

மரங்கொத்தியிட்ட முத்தெல்லாம்
கனுவாக கண்ணசைத்து நிற்கின்றன
மரத்தில்
எதிரெதிர் மரங்களின் வாக்கு மூலம்
இது.....

புல் பார்த்து மரம் ஏங்கிட
மரம் பார்த்து புல் ஏங்கிட
இரண்டையும் இணைய வைக்கிறது
மரத்தினை நிழலால்
புல்லினை மழையால் நனைத்த
இயற்கையொன்று....!

## பிண்டக்கூறு

இருக்கும் பொழுது இமைதிறந்து
உடலினை கூறிட்டு
எத்தனை இச்சைகளை
கொட்டிவிட முடியுமே
அத்தனை கூறுகளை
அங்குல நகர்வில் துண்டித்துவிடும்
பொழுதினும்- பெண்
பிரித்த கூறுகளை
மாராப்பினால் சேர்த்தனைத்தபடியும்
புத்தகங்களை இறுக்கி அனைத்தபடியும்
ஆடாமலும் அசையாலும்
நகர்த்தி நடைபோடுகிறாள்
இயற்கையில் பிரிக்கப்பட்ட
இதயத்திற்கு மேலே பதிக்கப்பட்ட
பிண்டக்கூறினை...
அவ்வப்போது கணமேறி
வெறுமைகளை மட்டுமே போர்த்தி
நகரவேண்டியதாகி உள்ளது
கருப்பை விட்டு வெளியேறி
பெண்ணெனும் பிண்டக்கூறுகளுக்கு....!

## வண்ணமயமாதல்

அலட்சியமான முறையில்
கவிதையை புனையத் தொடங்குகிறேன்
இறகை சிந்திச் செல்கிறது
நிமிர்ந்த பார்க்க தோதில்லாத
உயரத்தில் கழுகைப்போல்
பச்சைக்கிளி...

வண்ணமெல்லாம் மாறியதாக
நினைத்து பறக்க நினைக்கிறேன்
சுல்லென
தலையில் விழுந்த கோவைக்கனியாய்
வாலினை ஆட்டி
பச்சோந்தியென நினைவூட்டுகிறது

கழுகாய் நினைத்த பச்சைக்கிளி...

## வரைமுறை

வாசல் வரை எட்டிப்பார்த்த
அதுவிற்கு வெறுமைகளை
தந்துபோனது காலை
இருப்பினும்
கால்களை சுற்றியபடி
வீட்டின் கேட்டிற்று வெளியே
நாயும்
உள்ளே பூனையும்
இன்றும் தொடர ஆரம்பமானது
வரைமுறைகளை கடந்து
அள்ளியணைத்த
சிறு முத்தத்தில் சிலிர்த்த
ஐந்தறிவுகளின் சிலிர்ப்புகள்....

## துளி நிர்வாணம்

இதுவரை நான்
இப்படி ஓர் நிழலைப் பார்த்ததில்லை

நிர்வாணம் களைத்த வானத்தை
எட்டிப்பார்த்த நிலவு போல்
ஆங்காங்கே சொட்டியாடும்
மழைதனை..

ஊரெல்லாம் பறந்து திரிந்த
பறவையின் இறகின் நுனியில்
எனது நினைவுகளை..

இருப்பினும் நிசப்தமாக
கடந்துவிடுகின்றன
கனவு அருவியில் சத்தமற்ற
அந்தாதி துளிகளாய்,.
இதுவரை நான்
பார்த்ததில்லை.....!

## முட்டாள்

தனக்கு  உணவுண்டு என என்னும்
நாவினை தொங்கவிடும் சீவனுக்கு
என்னவோ நம்பிக்கை
வானி ஒழுகும் வரை உள்ளது
மீண்டும் வாரி எடுக்கப்படுகிறது
பிடிக்காத உணவுதனை
அடித்தால் வலிக்காத கற்களை
உணவாய் இடுகையில்....

—

கவிஞர். சே கார்கவி,
நாகப்பட்டினம்.
*(Er. Prof. சே கார்த்திகேயன். ME)*
*SWD.Chennai*



# மர மூளை

தடித்து வளர்ந்து
நிழல் பரப்பிய
பெருவுடலை
ஊண் வெட்டப்
பயன்படுத்துகையில்
மரமாகிவிடுகிறது
மனித மூளை.

## ஆறுதல்

அயர்ச்சி தோன்றும்
பொழுதுகளிலெல்லாம்
தோளின் மீது வந்தமரும்
வண்ணத்துப்பூச்சி
இறைவனின் கைவிரல்!

## கோட்டிற்கு புறம் சிதறும் சுண்டல்

வாளியிலிருந்து சிதறிக்கொள்கிற
ஓரிரு சுண்டல்களை அவன் விழிகள்
கண்டுகொள்ளவே இல்லை

பொட்டலம் கரண்டி
பத்துரூபாய் இவைகளிலேயே
அவன் கவனமும்
வாய்நிறைய 'சூடாருக்கு
சுண்டல்' என்கிற கபடியும்

சிதறிய ஒரு சுண்டலை
பொட்டலம் தாண்டியும்
எட்டிப்பார்க்கிறார்கள்

வறுமை மைதானத்தில்
கோட்டிற்கு புறமிருப்பவர்கள்!

எனது இந்தக்கவிதைகள் இதுவரை
வேறெங்கும் பிரசுரமாகவில்லை என
உறுதியளிக்கிறேன்

--

ரகுநாத் வ,
மதுரை.



திவ்ய தர்சினி,
11ஆம் வகுப்பு, குறிஞ்சிப்பாடி.

# மயக்கம் ஏனோ? அறுசீர் ஆசிரியவிருத்தம்

சண்பகம் நறுவீ வண்ணம்
தையலின் பொலிவு யாக்கை

கிண்கிணி யணிந்த மானாய்க்
கிடக்கைய ளக்கும் கால்கள்

நுண்ணிடைக் கொடியின் கொவ்வை
நோக்கிட மனத்தில் தேறல்

எண்ணியென் ஏக்கம் கூடி
என்னுயிர் அவளாய் இங்கே!

தையல் - பெண்; பொலிவு - அழகு;
யாக்கை - உடல்; கிண்கிணி - சலங்கை;
கிடக்கை - பூமி;
கொவ்வை - கோவைக்கனி;
தேறல் - மது;

//
தன்முனைக்கவிதை

சேட்டை செய்தால் அப்பாவிடம்
சொல்லிவிடுவேன் என்கிறாள்
நாய்க்குட்டிகள் வளர்க்கும்
குழந்தையில்லாத தாய்

—

ஸ்ரீவி. முத்துவேல்,
சென்னை.





ஓவியம்:
**ஹரிஸ்வரன்**

# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...
பகிரி: +91 8220567322

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

—

கி. மாணிக்கம்,
திறவுகோல் ஆசிரியர், குழு.